# அரக்கோணம் நகராட்சி
## சாதாரண நகர மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.18 நாள். 25.01.2023.

பொருள் : நகர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்: 31.01.2023 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு சாதாரண கூட்டம் நடைபெறுதல் – அறிவித்தல் – சம்மந்தமாக.

&&&&&

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் சாதாரண கூட்டம் 31.01.2023 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூடத்தில், நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரண கூட்டத்தில் நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(ஒம்)/–திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

இடம் : அரக்கோணம் நகராட்சி

நாள் :25.01.2023

**<u>பொருள் எண். 1</u>**

நகராட்சி ஆணையர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் –2022ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.289 நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றம் பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 2</u>**

நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.01/2023/அ1 நாள்.04.01.2023ல் கடிதத்தின்படி நகராட்சி நிர்வாகத்தின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளிகளிலும் பயிலும் மாணவ மாணவியர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்தவும், உலக நடப்புகளை அறிந்து கொள்ளவும், பொது மேலாளர் தினகரன் நாளிதழ் வேலூர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு தினகன் நாளிதழ் சிறப்பு சந்தா திட்டத்தின் சலுகை விலையில் (பிரதி ஒன்றுக்கு ரூ.4/–) கீழ் பள்ளி வேலை நாட்களில் தினமும் இரண்டு பிரதிகள் (Per day 2 Copies) கீழ்க்கண்ட பள்ளிகளுக்கு விநியோகம் செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | செய்தித்தாள்கள் வழ்ங்கப்பட உள்ள பள்ளிகளின் விவரம் | வழங்கப்பட உள்ள நாட்களின் விவரம் | வழங்கப்பட உள்ள பிரதிகளின் விவரம் |
|---|---|---|---|
| 1 | காந்திநகர் நடுநிலைப்பள்ளி | பள்ளி வேலை நாட்களில் மட்டும் | தினமும் இரண்டு பிரதிகள் (Per day 2 Copies) |
| 2 | சுவால்பேட்டை ஆரம்பப்பள்ளி | | |
| 3 | போலாட்சியம்மன் நடுநிலைபள்ளி | | |
| 4 | கிழக்கு நகராட்சி நடுநிலைப்பள்ளி | | |
| 5 | காலிவாரிகண்டிகை நகராட்சி ஆரம்ப பள்ளி | | |
| 6 | சோமசுந்தரம்நகர் நகராட்சி ஆரம்பள்ளி | | |
| 7 | நகரசுத்தி காலனி, நகராட்சி ஆரம்ப பள்ளி | | |
| 8 | கிருபில்ஸ்பேட்டை நகராட்சி ஆரம்ப பள்ளி | | |
| 9 | எம்.ஏ.ஜெயின் நகராட்சி நடுநிலைப்பள்ளி | | |
| 10 | நேருஜி நகர் நகராட்சி ஆரம்ப பள்ளி | | |

அலுவலக குறிப்பு :– 1.மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பள்ளி மாணவர்களின் நலன் கருத்தில் கொண்டு நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>(ந.க.எண்.035/2022/சி2)</u>**

**தீர்மானம் எண்.290 நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 3</u>**

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு 01.10.2022 முதல் 31.12.2022 வரை 36 DBC பணியாளர்களை மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலம் டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரப்பெற்றது. மேலும் பணியின் அவசரம் அவசியம் கருதி 06.01.2023 முதல் 31.01.2023 வரை ஏற்கனவே இந்நகராட்சியில் பணி செய்து வந்த இன்பம் மகளிர் சுய உதவிக்குழு, இளந்தென்றல் மகளிர் சுய உதவிக்குழு மற்றும் ஏஞ்சல் மகளிர் சுய உதவிக்குழு ஆகிய மூன்று மகளிர் சுய உதவிக்குழுக்களின் மூலம் 36 DBC பணியாளர்களை நகரமன்ற தலைவரின் முன்அனுமதிப்பெற்று பணியினை மேற்கொண்டமைக்கும், 01.02.2023 முதல் 31.03.2023 வரை மேலும் இரண்டு மாதங்களுக்கு நீடிப்பு செய்திடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.13.00 லட்சத்திற்கும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பணியின் அவசரம் அவசியம் கருதி 06.01.2023 முதல் 31.01.2023 வரை ஒரு மாதத்திற்கு மட்டும் நகரமன்ற அனுமதி பெற்று மேற்கொள்ளபட்டதற்கும், 01.02.2023 முதல் 31.03.2023 வரை மேற்கொள்ள. மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 1245/எச்1/2019)

**தீர்மானம் எண்.291** **நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4</u>**

இந்நகராட்சியில் A,B,C பிரிவுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்படும் 8 TATA ACE இலகுரக வாகனங்கள்(LCV) மற்றும் 1 நாய்கள் பயன வானம் டயர்கள் தேய்ந்து போன நிலையில் உள்ளதால் கீழ்காணும் விவரப்படி புதிய டயர்களை மாற்றம் செய்து கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | டயர்கள் எண் விவரம் | MRF VIJAYALAKSHMI AGENCIES, ARAKKONAM ஒன்றின் விலை (GST உட்பட) | G.N. AGENCIES, ARAKKONAM ஒன்றின் விலை (GST உட்பட) |
|---|---|---|---|
| 1 | 155 D12 MRF Savari Front | 3150 | 3300 |
| 2 | 155 D12 MRF SLG Back | 3400 | 3500 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய MRF TYRES VIJAYALAKSHMI AGENCIES, ARAKKONAM அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான தோராய செலவின தொகை ரூ.1.05 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.292** **நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 5**</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப1) துறை, அரசாணை (நிலை) எண்.10, நாள் 23.01.2023–ல் நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்துதல் தொடர்பாக அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :– ம**</u>ன்றம் பதிவு செய்யலாம்.

<u>**(ந.க.எண்.0129/2023/சி1)**</u>

**தீர்மானம் எண்.293** **நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றம் பதிவு செய்யப்பட்டது.**

<u>**பொருள் எண். 6**</u>

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளான போலாட்சியம்மன் நடுநிலை பள்ளி மற்றும் நகராட்சி கிழக்கு பள்ளி ஆகிய பள்ளி கட்டிடங்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அக்கட்டிடங்களில் பயிலும் பள்ளி மாணவர்கனை தற்காலிகமாக தனியருக்கு சொந்தமான கட்டிடமான தீபாத்தி அம்மன் கோயில் மற்றும் அம்பேத்கர் பவன் ஆகிய இடங்களில் தற்காலிக பள்ளிகள் இயங்கி வருகின்றன. மேற்படி பள்ளி கட்டிடங்களுக்கான பணிகள் முடியும் வரை தற்போது தனியருக்கு சொந்தமான கட்டிங்களின் மின்கட்டணம் கட்டுவது குறித்து அவர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் மின்வாரியத்திடமிருந்து பெறப்படும் பட்டியலின்படி அக்கட்டிடங்ளுக்கான மின் கட்டணங்களை இந்நகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.124/2023/இ1)

**தீர்மானம் எண்.294** **நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 7**</u>

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் ( KNMT) 2022–23 திட்டத்தின்கீழ் அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் பூங்கா அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. மேற்படி இடங்களில் பூங்கா அமைந்திருக்கும் பகுதி சாலையின் உயரத்தினை விட தாழ்வாக உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி நிற்கும் நிலை உள்ளது. எனவே மேற்படி பூங்காவின் உள்பகுதிகளில் மண் கொட்டி உயரப்படத்த வேண்டியுள்ளது. இப்பணியின் அவசியம் கருதி பூங்காவின் உள்பகுதிகளில் மண் கொட்டி உயரப்படத்தி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், பூங்கா பணியினை செய்து முடிக்கவும் வேண்டியுள்ளது. எனவே இப்பணிக்கான உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பூங்காவின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 02 | மாதவ நகர் | 3.00 |
| 2 | 22 | பாக்கியம்மாள் காலனி | 1.50 |

அலுவலக குறிப்பு: பொது மக்களின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.125/2023/இ1)

**தீர்மானம் எண்.295** **நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள தெருவிளக்குகளை மின்சார சிக்கன நடவடிக்கையாக LED விளக்குகளாக மாற்றியமைக்க மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (State Urban Infrastructure Development Fund 2022–2023) யின் மூலம் 2053 விளக்குகள் ரூ.195.16 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த அரசாணை எண். G.O.(Ms) No.145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள் 14.10.2022 அரசாணையின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.27000/2021/WB நாள் 14.10.2022ல் அனுமதியளித்து கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து அரக்கோணம் நகராட்சியில் கீழ்க்கண்டுள்ள பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 13.01.2023 அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் தகுதி பெற்றதை தொடர்ந்து 25.01.2023 அன்று விலை விகித ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டதில் பின்வருமாறு வரப்பெற்றுள்ளது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள தெருவிளக்குகளை மின்சார சிக்கன நடவடிக்கையாக 2053 LED விளக்குகளாக மாற்றியமைக்கும் பணி | ரூ.195.16 | D.V.போல்ஸ் சென்னை | 4.00% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் மேற்படி ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தை குறைத்து வழங்குமாறு கடிதம் (Negotiation) அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் கீழ்க்கண்ட விலை விகிதத்தில் பணிகளை செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் | மதிப்பட்டை விட அதிகம், | குறைத்து தர ஒப்புதல் அளித்தது | தற்சமயம் உள்ள விலை விகிதம் மதிப்பட்டை விட அதிகம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | D.V.போல்ஸ்,<br>சென்னை | 4.00% | −0.01 % | -- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்ததாரரின் ஒத்திசைவு கடிதத்தின்படி மதிப்பீட்டை விட −0.01% குறைத்து பணியினை செய்ய ஒப்புதல் கடிதம் அளித்துள்ளதை ஏற்று பணிகளை மேற்கொள்ள நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1119/2021/இ1)

**தீர்மானம் எண்.296** **நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :− அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 09</u>**

2021−22 ஆண்டிற்கான 15வது மத்தியநிதிக்குழு மான்யம் (UnTied Grant) திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூ.74.00 இலட்சம் மதிப்பீட்டில் அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 733 எண்ணிக்கை புதிய மின் கம்பம் அமைத்து மின் விளக்குகளை அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31118/2021/CFC−1, நாள்.14.10.2022 அவர்களின் கடிதத்தில் கீழ்க்கண்டுள்ள பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 13.01.2023 அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் தகுதி பெற்றதை தொடர்ந்து 25.01.2023 அன்று விலை விகித ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டதில் பின்வருமாறு வரப்பெற்றுள்ளது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய மின் கம்பத்துடன் 20W, 40W மற்றும் 90 W LED மொத்தம் 733 தெரு மின் விளக்குகளை அமைத்தல் | 75.29 | D.V.போல்ஸ் சென்னை | 4.00% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் மேற்படி ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தை குறைத்து வழங்குமாறு கடிதம் (<u>Negotiation</u>) அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் கீழ்க்கண்ட விலை விகிதத்தில் பணிகளை செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் | மதிப்பட்டை விட அதிகம், | குறைத்து தர ஒப்புதல் அளித்தது | தற்சமயம் உள்ள விலை விகிதம் மதிப்பட்டை விட அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | D.V.போல்ஸ்,<br>சென்னை | 4.00% | −0.01 % | -- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்ததாரரின் ஒத்திசைவு கடிதத்தின்படி மதிப்பீட்டை விட −0.01% குறைத்து பணியினை செய்ய ஒப்புதல் கடிதம் அளித்துள்ளதை ஏற்று பணிகளை மேற்கொள்ள நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(**ந.க.எண்** 319 /2021/இ1)

**தீர்மானம் எண்.297** **நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

அரக்கோணம் நகராட்சிக்கு 2022–2023 (இரண்டாம் கட்டம் ) ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாடு திட்டத்தில் (TURIP) கீழ்குறிப்பிட்டுள்ள 3 சிப்பம் சாலைப்பணிகள் மேற்கொள்ள ரூ.517.50 இலட்சத்தில் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 24826/2022/SS1 நாள்:26.12.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ, எண் | வார்டு எண் | Unicode | தெருவின் பெயர்கள் | நீளம் | அகலம் | மொத்த பரப்பளவு | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | சிப்பம் – 1 (பேவர் பிளாக் சாலை பணிகள்) | | | | | | |
| 1 | 2 | 024002R053 | வார்டு 02 வள்ளலார் 2வது குறுக்குத் தெரு | 0.083 | 4.10 | 340.3 | 662000.00 |
| 2 | 2 | 024002R054 | வார்டு 02ல் 3வது குறுக்குத் தெரு | 0.054 | 3.90 | 210.6 | 410000.00 |
| 3 | 3 | 024003R073 | வார்டு 03 கணேஷ் நகர் 4வது தெரு | 0.294 | 5.00 | 1470 | 2859000.00 |
| 4 | 8 | 024008R216 | வார்டு 08 குறிஞ்சி நகர் பிரதான சாலை | 0.287 | 4.60 | 1320.2 | 2559000.00 |
| 5 | 8 | 024008R196 | வார்டு 08 ஜனதா ரைஸ் மில் குறுக்கு தெரு | 0.260 | 4.90 | 1274 | 2486000.00 |
| 6 | 9 | 024009R230 | வார்டு 09 அருந்ததி பாளையம் | 0.147 | 3.00 | 441 | 858000.00 |
| 7 | 15 | 024015R291 | வார்டு 15 கலைவாணர் தெரு | 0.286 | 4.30 | 1229.8 | 2392000.00 |
| 8 | 18 | 024018R309 | வார்டு 18 நரசிம்மன் தெரு | 0.146 | 4.00 | 584 | 1148000.00 |
| 9 | 20 | 024020R351 | வார்டு 20 அன்னை கஸ்தூரிபாய் தெரு | 0.196 | 4.00 | 784 | 1525000.00 |
| 10 | 31 | 024031R481 | வார்டு 31 புதுப்பேட்டை பிரதான தெரு (வடக்கு) | 0.145 | 4.00 | 580 | 1131000.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | 35 | 024035R540 | வார்டு 35 முனுசாமி குறுக்குத் தெரு | 0.155 | 4.50 | 697.5 | 1370000.00 |
| | | | | **2.053** | | 8931.4 | 17400000.00 |
| | **சிப்பம் – 2 (பேவர் பிளாக் சாலை பணிகள்)** | | | | | | |
| 1 | 16 | 024016R298 | வார்டு 16 முருகப்பன் தெரு | 0.386 | 6.50 | 2509 | 4760000.00 |
| 2 | 19 | 024019R312 | வார்டு 19 ஜீவானந்தம் தெரு | 0.088 | 5.00 | 440 | 830000.00 |
| 3 | 20 | 024020R352 | வார்டு 20 மங்களங்கிழார் தெரு | 0.435 | 4.00 | 1740 | 3300000.00 |
| 4 | 32 | 024032R496 | வார்டு 32 ஜெகஜீவன்ராம் ரோடு | 0.264 | 4.00 | 1056 | 2000000.00 |
| 5 | 27 | 024027R449 | வார்டு 27 சோமசுநாதரம் 1வது தெரு | 0.387 | 5.00 | 1935 | 3690000.00 |
| 6 | 28 | 024028R463 | வார்டு 28 சோமசுநாதரம் 6வது தெரு | 0.177 | 4.40 | 778.8 | 1490000.00 |
| 7 | 28 | 024028R466 | வார்டு 28 சோமசுந்தரம் 7வது தெரு | 0.150 | 4.00 | 600 | 1130000.00 |
| | | | | **1.887** | | 9058.8 | 17200000.00 |
| | **சிப்பம் – 3 (தார் சாலை பணிகள்)** | | | | | | |
| 1 | 1 | 024001R004 | வார்டு 01 அண்ணா தெரு விரிவாக்கம் | 0.357 | 5.00 | 1785 | 2800000.00 |
| 2 | 1 | 024001R006 | வார்டு 01 அண்ணா 2வது குறுக்குத் தெரு | 0.050 | 5.00 | 250 | 400000.00 |
| 3 | 19 | 024019R314 | வார்டு 19 பாலசுந்தரம் தெரு (பெரியார் நகர்) | 0.432 | 4.00 | 1728 | 2700000.00 |
| 4 | 9 | 024009R220 | வார்டு எண்.9 லட்சுமி நகர் | 0.510 | 5.00 | 2550 | 4000000.00 |
| 5 | 8 | 024008R200 | வார்டு எண்.8 காலிவாரி கண்டிகை 3வது தெரு | 0.222 | 6.00 | 1332 | 2100000.00 |
| 6 | 20 | 024020R337 | வார்டு எண் 20 கிரிசிங் நகர் 1வது தெரு | 0.255 | 4.50 | 1147.5 | 1800000.00 |
| 7 | 21 | 024021R362 | வார்டு 21 லட்சய்யனார் 5வது குறுக்குத் தெரு | 0.430 | 5.00 | 2150 | 3300000.00 |
| | | | | **2.26** | | 10942.5 | 17100000.00 |
| **Grand Total** | | | | **6.62** | | | **51700000.00** |

**அலுவலக குறிப்பு** மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.1268/2022/இ1)**

**தீர்மானம் எண்.298** **நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2022–23ஆம் ஆண்டின் கீழ் அரக்கோணம் நகராட்சியில் கீழ்காணும் 3 சிப்பங்களுக்கான சாலைப்பணிகளை மேற்கொள்ள ரூ.517.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி 20.01.2023 அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் சிப்பம் –1ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், சிப்பம் –2ல் ஒரு ஒப்பந்தப்புள்ளியும், மற்றும் சிப்பம்–3ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளளிகளும் வரப்பெற்றுள்ளது, வரப்பெற்ற மூன்று சிப்பங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதி பெற்றதை தொடர்ந்து 25.01.2022 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) திறக்கப்பட்டதில் பின்வருமாறு வரப்பெற்றுள்ளது.

| சிப் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **1** | Providing Paver Block Road to Vallalar 2nd Cross Street–024002R053, 3rd Cross Street–024002R054 in Ward 02; Ganesh Nagar 4th Street–024003R073 in Ward 03; Kurinji Nagar Main Road–024008R216 in Ward 08; Janatha Rice Mill cross street–024008R196, Arunthathi Palayam–024009R230 Ward 09; Narasimman Street–024018R309 in Ward 18; Kalaiavanar Street–024015R291 in Ward 15; Annai Kasthuri bai Street–024020R351 in Ward 20; Pudhupet Main Street (South) –024031R481 in Ward 31; Munusamy Cross Street –024035R540 in Ward 35 at Arakkonam Municipality | **174.00** | R.K.Construction ஆற்காடு | 4.82 % மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | MP & CO அரக்கோணம் | 5.64 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| **2.** | Providing Paver Block Road to Murugappan Street–024016R298 in Ward 16, Jeevanandam Street–024019R312 in Ward 19, Managalakizhar street–024020R352 in Ward 20, Somasunadaram 1st street–024027R449 Ward 27, Somasunadaram 6th street –024028R463, 7th street –024028R466 Ward 28, Jagajeevaram Road–024032R496 in Ward 32 at Arakkonam Municipality | **172.00** | திரு.D.M.ராஜ் அரக்கோணம் | –0.41 % மதிப்பீட்டை விட குறைவு |
| **3.** | Providing BT Surface Road at Anna Street Extension –024001R004, 2nd Cross Street –024001R006 in Ward 01, Balasundaram Street (Periyar nagar) –024019R314 in Ward 19, Lakshmi nagar – 024009R220 in ward no.8 in ward no.9, Galiwari kandigai 1st street – 024008R200 in ward no.8, Girisingh Nagar 1st street – 024020R337 in ward no.20, Latchayyanar 5th Cross Street–024021R362 in Ward 21 at Arakkonam Municipality | **171.00** | MP & CO அரக்கோணம் | 4.89 % மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திரு.S.ரமேஷ்பாபு அரக்கோணம் | 6.49 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் சிப்பம் –I, மற்றும் சிப்பம் – III க்கான வரப்பெற்ற இரு விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் அதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள

1. சிப்பம் –I M/S R.K.Construction, ஆற்காடு – 4.82 %
2. சிப்பம் –III M/S MP & CO, அரக்கோணம் – 4.89 %

மேற்படி சிப்பம் –I ஒப்பந்ததாரர் M/S R.K.Construction, ஆற்காடு மற்றும் சிப்பம் – III ஒப்பந்ததாரர் M/S MP & CO, அரக்கோணம் அவர்களுக்கும் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தை குறைத்து வழங்குமாறு கடந்த 25.01.2023 அன்று Negotiation கடிதம் அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் ஒப்பந்ததாரர் M/S R.K.Construction, ஆற்காடு மற்றும் M/S MP & CO, அரக்கோணம் அவர்களின் 25.01.2023ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்ட விலை விகிதத்தில் பணிகளை செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

| பணி | ஒப்பந்ததாரர் | மதிப்பட்டை விட அதிகம், | குறைத்து தர ஒப்புதல் அளித்தது | தற்சமயம் உள்ள விலை விகிதம் மதிப்பட்டை விட அதிகம் |
|---|---|---|---|---|
| சிப்பம்–1 | M/S R.K.Construction, ஆற்காடு | 4.82 % | 0.00 % (மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு) | – |

| | | | | |
|---|---|---|---|---|
| சிப்பம்–3 | M/S MP & CO,<br>அரக்கோணம் | 4.89 % | 0.00 % (மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு) | – |

மேற்படி சிப்பம்–1 மற்றும் சிப்பம்– 3 வரப்பெற்ற ஒப்பந்ததாரரின் ஒத்திசைவு கடிதத்தின் படி சாலை பணிக்கு தேவையான மூலப்பொருள்களின் விலை உயர்வினையும் கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தில் பணியினை செய்ய ஒப்புதல் தெரிவித்து கடிதம் அளித்துள்ளனர். திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டும் , காலதாமதத்தையும் தவிர்க்கும் பொருட்டு சிப்பம் – 1 சிப்பம் – 2 மற்றும் சிப்பம் – 3 பணிகளை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளியின் விலை

விகிதத்தில் பணியினை செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1268/2022/இ1)**

**தீர்மானம் எண்.299 நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12</u>**

அரசாணை (நிலை) எண்.183, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப1) துறை நாள்.31.12.2022–ல் கசடு கழிவு மேலாண்மை (ஒழுங்குமுறை) விதிகள் 2022 (Septage Management (Regulation) Rules 2022) தொடர்பாக வரப்பெற்றுள்ள அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.300 நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 13</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 22ல் புதிய பேருந்து நிலையம் சோளிங்கர் ரோட்டில் சுவால் பேட்டை பகுதிக்கு செல்லும் பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்துள்ளதால் மழைநீர் செல்லாமல் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவே பொதுமக்களின் நலன் கருதி புதியதாக சிறுபாலம் அமைப்பதற்கு தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.127/2023/இ1)**

**தீர்மானம் எண்.301 நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 14</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022–23 ஆம் ஆண்டின் கீழ் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் 11 எண்ணிக்கையிலான பணிக்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவரின் செயல்முறைகள் இராணிப்பேட்டை மாவட்டம் அவர்களின் கடித செயல்முறை ந.க.எண்.அ4/1141/2022 நாள்.20.10.2022 ல்

ரூ.23.10 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு இலட்சத்தில் ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு எண்.36 செய்யூர் பேட்டை தெரு, ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | ரூ.2.10 |
| 2 | வார்டு எண்.27 சோமசுந்தரம் நகர், ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | ரூ.2.10 |
| 3 | வார்டு எண்.24 ABM சர்ச் 3வது தெரு, ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | ரூ.2.10 |
| 4 | வார்டு எண்.23 இராணியம்மாள் தெரு, ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | ரூ.2.10 |
| 5 | வார்டு எண்.20 கிரிசிங் நகர் தெரு, ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | ரூ.2.10 |
| 6 | வார்டு எண்.15 அஜிபாய் லே அவுட் தெரு, ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | ரூ.2.10 |
| 7 | வார்டு எண்.14 டவுன்ஹால் 1வது தெரு, ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | ரூ.2.10 |
| 8 | வார்டு எண்.3 கணேஷ் நகர் 13வது தெரு, ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | ரூ.2.10 |
| 9 | வார்டு எண்.2 மாதவ நகர் விரிவாக்கம் தெரு, ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | ரூ.2.10 |
| 10 | வார்டு எண்.28 சத்தியவாணிமுத்து நகர் 3வது தெரு, ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | ரூ.2.10 |
| 11 | வார்டு எண்.28 சோமசுந்தரம் நகர் 4வது தெரு, ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின்விசை பம்பு அமைக்கும் பணி | ரூ.2.10 |
| | மொத்தம் | ரூ.23.10 |

,அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்
(ந.க.எண்.1029/2022/இ1)

**தீர்மானம் எண்.302** **நாள். 31.01.2023**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்)/–திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்,
அரக்கோணம் நகராட்சி.

**// உண்மை நகல் //**

ஆணையர்,
அரக்கோணம் நகராட்சி.